**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, MADURAI.**

**O.S. No.42/2023**

**P.W.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ரா.அங்கம்மாள் | **Husband Name** : | லேட். திரு. ராமுத்தேவர் |
| **Village** | : | **Taluk** | : |
| **Calling** | : | **Age** | : |

Solemnly affirmed by of this Court on **16.07.2026** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

**வாதி தரப்பில் முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வழக்கு விவரம் தெரியும். நான் எனது தரப்பு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். 10.07.2013ம் தேதியன்று கருப்பையாவின் வாரிசுதாரர்களான ரத்தினம், சோலை, செல்வராஜ், முத்துலெட்சுமி, பேச்சியம்மாள், பூங்கோதை ஆகியோர்கள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.09.2013ம் தேதியன்று வாதியும், பிரதிவாதியும் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.04.2021ம் தேதியன்று வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்த பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.03.2022ம் தேதியன்று வாதி, வழக்கறிஞர் மூலம்

பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சல ரசீதுடன் அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.04.2022ம் தேதியன்று வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சல ரசீதுடன் அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.04.2022ம் தேதியன்று மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.11.2022ம் தேதியன்று வாதி தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கொடுத்த விண்ணப்ப படிவத்தின் அலுவலக நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.12.2022ம் தேதியன்று பொது தகவல் அலுவலர் கொடுத்த பதிலின் அசல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தோன்றாதரப்பினராகியுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.**

Sd/– அங்கம்மாள்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.07.16 19:17:32 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.